

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 15

# இன்றைய தலைப்புகள்


- பகுதி 1: அபிசீனியாவிற்கு முதல் ஹிஜ்ரத் செய்தது
- பகுதி 2: முஸ்லிம்கள் மீண்டும் மக்காவிற்கு திரும்புதல்
- பகுதி 3: அபிசீனியாவிற்கு இரண்டாவது ஹிஜ்ரத் செய்தது
- பகுதி 4: அபிசீனியாவிலிருந்து முஸ்லிம்கள் திரும்ப வர குரைஷிகள் செய்த சதி

## பகுதி 1: அபிசீனியாவிற்கு முதல் ஹிஜ்ரத் செய்தது:

- நபித்துவத்தின் 5வது ஆண்டில், முஸ்லிம்கள் மீதான சித்திரவதைகளும், துன்புறுத்தல்களும் மென்மேலும் கடுமையாகிவிட்டன.

- அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: (நபியே!) நீர் கூறும்: ''நம்பிக்கை கொண்ட என் அடியார்களே! உங்களுடைய இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள்! இவ்வுலகில் நன்மை செய்தோருக்கு நன்மையே கிடைக்கும்; அல்லாஹ்வுடைய பூமி விசாலமானது: பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாகக் கணக்கின்றிப் பெறுவார்கள்.'' – ஸூரா அஜ்ஜுமர் (39:10)

- அப்போதுதான், அபிசீனியாவுக்கு (எத்தியோப்பியா) ஹிஜ்ரத் செய்ய விரும்புபவர்கள் அங்கு செல்லலாம் என்று நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு பரிந்துரைத்தார்கள்.




- நபி (ஸல்) மேலும் கூறினார்கள், ''அங்கே நீதியுள்ள ஒரு கிறிஸ்தவ அரசர் இருக்கிறார். அவர் தனது குடிமக்களைத் துன்புறுத்துவதில்லை. ஆதலால் நீங்கள் அல்லாஹ்வை தடையில்லாமல் வணங்க உங்களை அனுமதிப்பார்''. (இப்னு இஸ்ஹாக்)

- நபி (ஸல்) அவர்கள் இந்த ஆலோசனையை வழங்கியபோது, சுமார் 15 முதல் 20 பேர் ஹிஜ்ரத் செய்து அபிசீனியாவுக்கு குடி பெயர்ந்தனர். அவர்களில் நபி (ஸல்) அவர்களின் மகள் ருக்கையா (ரலி) மற்றும் நபியின் மருமகன் உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலி) ஆகியோரும் அடங்குவர்.

- நஜாஷி அல்லது நெகஸ் என்பது அபிசீனியாவின் மன்னருக்கு வழங்கப்பட்ட

பட்டம்; அவரது உண்மையான பெயர் அஸ்ஹாமா.

- அவர் ஒரு கிறிஸ்தவ ஆட்சியாளர். அந்தக் காலத்தில் உண்மையான கிறிஸ்தவத்தை பின்பற்றிய ஒரு சிலரில், இவரும் உண்டு. நபி (ஸல்) போதனைகளைப் பற்றி கேள்விப்பட்ட நெகஸ் கூறினார்: ''இது நபி மூஸா (அலை) அவர்களுக்கு வந்த அதே இடத்தில் இருந்து வருகிறது''.

- முஸ்லிம்கள் அபிசீனியாவை அடைந்தனர். அங்கிருந்த கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தின் போதனைகளை தங்கள் மதத்துடன் தொடர்புபடுத்த முடிந்தது. அவர்கள் முஸ்லிம்களை அன்புடன் வரவேற்று, நல்ல விருந்தோம்பல்கள் செய்தனர்.

- இவ்வாறாக அபிசீனியாவிற்கு வந்த முஸ்லிம்கள் தங்களது இருப்பை நிலைநிறுத்தத் தொடங்கினர். அங்கு அவர்கள் இஸ்லாத்தைப் பின்பற்றுவதற்கு பாதுகாப்பான இடமாகவும் இருந்தது. அவர்களுக்கு உண்ண உணவும் தாராளமாக கிடைத்தது.

- இவ்வாறாக அவர்கள் குடியேறிய மூன்று மாதங்களுக்குள், குரைஷிகள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதாக ஒரு வதந்தியைக் கேட்க நேர்ந்தது.

- நாளுக்குநாள் இந்த வதந்தி மென்மேலும் வலுப்பெற்றதால், முஸ்லிம்கள் இதை உண்மை என்று நம்பினர்.

- எனவே அவர்கள் அனைவரும் தங்களது உடமைகளை எடுத்துக்கொண்டு மக்காவிற்குத் திரும்பிச் சென்றனர்.

## பகுதி 2: முஸ்லிம்கள் மீண்டும் மக்காவிற்கு திரும்புதல்:

- இந்த வதந்தி எப்படி வந்தது என்பதைப் புரிந்து கொள்ள, ஸஹீஹ் புகாரியில் உள்ள ஒரு ஹதீஸை நாம் பார்க்க வேண்டும்.

- நபித்துவத்தின் 5வது ஆண்டு ரமலான் மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் கஃபாவிற்கு அருகில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது கஃபாவைச்சுற்றி ஏராளமான குரைஷிகள் கூடியிருந்தனர்.

- நபி (ஸல்) அவர்கள் அந்தத் தொழுகையில் ஸூரா அந்நஜ்ம் (53) வசனங்கள்

அனைத்தையும் ஓதினார்கள்.

- ஸூரா அந்நஜ்ம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஸூரா ஆகும். மேலும் நபி (ஸல்) அவர்கள் அந்த ஸூராவின் வசனங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஓதும்போது, அது எப்படி கஃபாவின் அருகிலிருந்த குரைஷிகளை பிரமிப்பில் ஆழ்த்தியிருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க முடியும்.

- நபி (ஸல்) அவர்கள் ஸூராவின் இறுதியை நெருங்கி, இந்த வசனங்களை ஓதினார்கள்:

- ''இச்செய்தியைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? (இச்செய்தியிலிருந்து) நீங்கள் சிரிக்கின்றீர்களா? நீங்கள் அழாமலும் இருக்கின்றீர்களா?

- அலட்சியமாகவும் நீங்கள் இருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு ஸு ஜூது செய்யுங்கள்; இன்னும், (அவனையே) வணங்குங்கள்''. – ஸூரா அந்நஜ்ம் (53: 59-62)

- இந்த வசனங்களைக் கேட்ட முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் என்று அங்கு கூடியிருந்த அனைவரும் கஃபாவின் முன் ஸஜ்தா செய்து விழுந்தனர் என்று கூறப்படுகிறது.

- ஆனால், ஸஜ்தா செய்யாத ஒரே நபர் உமையா இப்னு கலஃப் என்ற முதியவர் மட்டுமே. அவர் தரையில் இருந்து சிறிது மண்ணை எடுத்து தனது நெற்றியில் தேய்த்துக் கொண்டார்.

- நபி (ஸல்) அவர்கள் ஓதிய வசனங்களைக் கேட்டு குரைஷிகள் ஸஜ்தா செய்த சம்பவம் அரேபியா முழுவதும் பரவியது.

- இந்த செய்தி அபிசீனியாவை அடைந்த நேரத்தில், குரைஷிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றே பரவியது. அபிசீனியா முஸ்லிம்கள் மக்காவுக்குத் திரும்புவதற்கு அதுவே காரணம்.

## பகுதி 3: அபிசீனியாவிற்கு இரண்டாவது ஹிஜ்ரத் செய்தது:

- அபிசீனியா முஸ்லிம்கள் மக்காவுக்குத் திரும்பியபோது, அவர்கள் கேள்விப்பட்டது உண்மையல்ல என்பதையும், குரைஷிகள் இஸ்லாத்தை ஏற்கவில்லை என்பதையும் தெரிந்துகொண்டனர்.

- அபிசீனியாவிலிருந்து மக்காவிற்கு வந்த முஸ்லிம்களை அங்குள்ள மக்கள் வரவேற்கவும் இல்லை. அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, ஏற்றுக்கொள்ளத் தயாராகவும் இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் முதலில் மக்காவிலிருந்து வெளியேறி, அபிசீனியாவிற்கு சென்றதால்தான்.

- சில முஸ்லிம்கள் தங்கள் உறவினர்களை அணுகி உதவி கேட்டனர். அவர்களில் சிலர் உதவியைப் பெற்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், மக்காவில் இந்த முஸ்லிம்களின் வாழ்க்கை முன்பிருந்ததைவிடவும் மிகவும் கடினமாகிவிட்டது.

- அபிசீனியா வாழ்க்கை நன்றாக இருந்ததை அவர்கள் உணர்ந்தனர். மக்கத்து முஸ்லிம்களிடம் தங்கள் அனுபவங்களை எடுத்துரைத்தனர். அங்கு அவர்கள் சாப்பிட போதுமான உணவு இருந்தது என்றும், அவர்கள் பாதுகாப்பாக இஸ்லாத்தை பின்பற்ற முடிந்தது என்றும் கூறினர்.

- இதனால் வெகு விரைவில் அபிசீனியாவிற்கு இரண்டாவது ஹிஜ்ரத் தொடங்கியது. ஆனால் இந்த முறை சுமார் 80 முஸ்லிம்கள் இடம்பெயர்ந்தனர்.



- அந்த நேரத்தில் மக்காவில் சுமார் 150 முஸ்லிம்கள் இருந்திருப்பார்கள் என்று கூறப்படுகிறது. எனவே, 50% முஸ்லிம்கள் அபிசீனியாவிற்கு இரண்டாவது முறையாக குடிபெயர்ந்தனர்.

- இந்த முறை உஸ்மான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் மக்காவில் தங்கிவிட்டார். இந்த ஹிஜிரத்திற்கு நபி (ஸல்) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர், ஜாஃபர் இப்னு அபிதாலிப் (ரலி) தலைமை தாங்கினார்.

- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மக்காவின் மொத்த மக்கள் தொகை எவ்வளவு என்பது பற்றிய சரியான கணக்கெடுப்பு இல்லை. ஆனால், சுமார் 700 முதல் 1000 பேர் வரை இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

- ஆக, 80 முஸ்லிம்கள் அபிசீனியாவில் குடியேறியது, மக்காவின் மக்கள் தொகையில் 10% ஆக இருந்தது. இது குரைஷிகளுக்கு பெரும் தர்மசங்கடமாக மாறியது.

- எனவே இந்த குடியேற்றத்தை அனுமதிக்கக் கூடாது என்றும், அதை நிறுத்த வேண்டும் என்றும் குரைஷிகள் முடிவு செய்தனர்.

## பகுதி 4: அபிசீனியாவிலிருந்து முஸ்லிம்கள் திரும்ப வர குரைஷிகள் செய்த சதி:

- முஸ்லிம்கள் அபிசீனியாவிலிருந்து மக்காவுக்குத் திரும்ப வேண்டும் என்று குரைஷிகள் விரும்பினர்.

- எனவே நஜாஷியிடம் நேரடியாக முறையிட, இரண்டு பேரை அபிசீனியாவுக்கு அனுப்பி வைத்தனர். அம்ர் இப்னு அல்ஆஸ் அவர்களில் ஒருவர். அவர் மிகவும் புத்திசாலியான அரசியல்வாதி மற்றும் திறமையாக பேச்சுவார்த்தை நடத்துபவர்.

- ஸஹீஹுல் புகாரீயில் இந்த சம்பவத்தை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் பின்வருமாறு விவரிக்கிறார்கள்.

- அம்ர் இப்னு அல்ஆஸ் அபிசீனியாவை அடைந்தபோது, அவர் முதலில் அனைத்து அமைச்சர்களையும் சந்தித்து மக்காவில் இருந்து கொண்டுவந்த விலைமதிப்பற்ற பரிசுப் பொருட்களை அவர்களுக்கு வழங்கினார்.

- இந்தப் பரிசுப் பொருட்கள் மக்காவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஒட்டகத் தோலில் செய்யப்பட்ட பொருட்களாக இருந்தன.

- இவ்வாறாக பரிசுகளை அமைச்சர்களுக்கு லஞ்சம் கொடுத்து, மறுநாள் நஜாஷியுடன் நடக்கும் பேச்சுவார்த்தையில் அவர்களின் ஆதரவு தேவை என்று கூறினார். இவ்வாறு செய்தால் நஜாஷி, முஸ்லிம்களை தன்னிடம் ஒப்படைத்து விடுவார் என அம்ர் இப்னு அல்ஆஸ் எண்ணினார்.

- அடுத்த நாள் அம்ர் இப்னு அல்ஆஸ், நஜாஷியைச் சந்தித்து, தங்களிடம் இருந்த விலைமதிப்பற்ற சில பொருட்களை அவருக்குப் பரிசளித்தார்.

- பின்னர் அவர் நஜாஷியிடம், ''எங்கள் நாட்டிலிருந்து சில முட்டாள் இளைஞர்கள் உங்கள் நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்துள்ளனர். அவர்கள் எங்கள் மதத்தை உதறிவிட்டார்கள்; அவர்கள் உங்கள் மதத்தையும் தழுவவில்லை.



- எனவே, எங்கள் சமூகத்து தலைவர்கள், எங்களை உங்களிடம் அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் இந்த முட்டாள்களை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்கள் அவர்களை சமாளித்துக் கொள்கிறோம்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

- லஞ்சம் வாங்கிய அங்கிருந்த அமைச்சர்கள் எழுந்து நின்று, ''இவர் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது'' என்று கூறி அம்ர் இப்னு அல்ஆஸ் வேண்டுகோளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

- ''இங்கு குடியேறியிருப்பவர்கள் நம் நாட்டில் அந்நியர்கள். அவர்களை அவர்கள் நாட்டிற்கே திருப்பி அனுப்பி விடுங்கள். அங்குள்ள சமூகத்தார்கள் இந்த விவகாரங்களை சமாளிக்கட்டும்''.

- இதைக்கேட்ட நஜாஷி, ''இல்லை! அவர்கள் எனது நாட்டை தேர்ந்தெடுத்து, எனது பாதுகாப்பைப் பெற்ற பிறகு, என்னால் அவர்களைத் திரும்ப ஒப்படைக்க முடியாது. ஆனால், நான் அவர்களை அழைத்து, அவர்களின் தரப்பைக் கேட்கிறேன்'' என்று பதிலளித்தார்.

- நஜாஷி ஒரு தூதரை அனுப்பி, ஜாஃபர் இப்னு அபிதாலிபையும் மற்றும் அவருடன் இருக்கும் அனைத்து முஸ்லிம்களையும் அடுத்த நாள் அரண்மனைக்கு வந்து தங்கள் தரப்பு வாதத்தை விளக்குமாறு சொல்லியனுப்பினார்.